பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 30 சனிக்கிழமை 15.07.2023 கதிர் 246

# குருந்தூர்மலையில் தமிழர்கள் பொங்கவிடாமல் பிக்குகள், சிங்களவர்கள், பொலிஸார் அடாவடி

## இதனால் அங்கு நேற்றுப் பதற்றம்; பொங்கல் நெருப்பை சப்பாத்துக் காலால் உதைந்து அணைத்த பொலிஸ் அதிகாரி



வவுனியா மாவட்ட எல்லையில் அடர் காட்டுக்குள் அமைந்துள்ள குருந்தூர் மலையில் நேற்று பிரதேதினத்தையொட்டி பொங்கலிடச் சென்ற தமிழர்களை, அங்கு திட்டமிட்டுக் கூட்டப்பட்ட பிக்குகள் மற்றும் சிங்களவர்களும் அவர்களுக்குச் சார்பாகச் செயற்பட்ட பொலிஸாரும் சேர்ந்து தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பியுள்ளனர். பெருமளவு பொலிஸார் பட்டன்கள், கண்ணீர்புகைக் குண்டுகள் சகிதம் குவிக்கப்பட்டிருந்தனர். பொங்கலுக்காக ஏற்றப்பட்ட நெருப்பை சப்பாத்துக் காலால் மிதித்து அணைத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் அடாவடித்தனம் புரிந்தது டன், முரண்பாடு ஏற்பாடும் நிலை இருப்பதால் பொங்கலிட முடியாது என்று தெரிவித்து தமிழர்களை அங்கிருந்து பலவந்தமாகப் பொலிஸார் வெளியேற்றினர்.

முன்னதாக, நேற்றையதினம் குருந்தூர்மலையில் தமிழர்கள் விக்கிரகங்களைப் பிரதிஸ்டை செய்து பொங்கலிட இருக்கின்றார்கள் என்றும் இதற்கு எதிராகச் சிங்கள மக்கள் அணிதிரண்டு வந்து தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவை மீறிக் கட்டி முடிக்கப்பட்டுள்ள விகாரையின் பிக்குவான கல்கமுக சந்தபோதி சமூக ஊடகங்கள் ஊடாகவும், சிங்கள ஊடகங்கள் ஊடாகவும் அழைப்பு விடுத்திருந்தார்.

இதேவிடயத்தைக் குறிப்பிட்டு இதனால் அங்கு இனமுறுகல் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் தமிழர்களின் பொங்கலைத் தடுத்து நிறுத்துமாறு முல்லைத்தீவு பொலிஸ் நிலையதில் ஜூலை 11 முறைப்பாடு ஒன்றையும் கல்கமுவ சந்தபோதி தேரர் வழங்கியிருந்தார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரி இருந்தனர். தடை உத்தரவை வழங்க மறுத்த நீதிவான் மன்றம், விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யாமல் தமிழர்கள் பொங்கல் வழிபாட்டில் ஈடுபட முடியும் என்று தெரிவித்தது.

இதையடுத்து பிரதோ தினமான நேற்று குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கலிட தமிழர்களைத் திரண்டு வருமாறு ஆலய நிர்வாகத்தினரும் அழைப்பு விடுத்திருந்தனர். மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என வழக்கத்தைவிட அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் அங்குகூடியிருந்தனர்.

அதேபோன்று கல்கமுவ தேரரின் அழைப்புக்கேற்ப சிங்களவர்கள் பலரும் பிக்குகளும் குருந்தூர்மலைக்கு வெளி இடங்களில் இருந்து வாகனங்களில் அழைத்துவரப்பட்டனர். கலகமடக்கும் பொலிஸார், அதிரடிப் படையினர் உட்படப் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

☞2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் ஆளும் தரப்பினர் தடுத்து நிறுத்தியதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்களின் மீதான தீர்ப்பு விரைவில் வரவுள்ளது. அரசுக்கு எதிராகவே இந்தத் தீர்ப்பு வரும் என்று அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வழக்கு விசாரணையின்போது, ஆளும் தரப்பின் சார்பில் சட்டமா அதிபரால் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகள் எல்லாவற்றையும் 5 நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு நிராகரித்திருப்பதை இதற்கான ஆதாரமாகக் காட்டுகின்றார்கள்.

தேர்தலை நடத்துவதற்குப் போதிய நிதி இல்லை என்பதால், அதனை நடத்தா மல் இருப்பதாக ஆளும் தரப்பு கூறுகின் றது. ஆனால், இந்த முடிவுக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு கடுமையானதாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு

☞2

## நால்வர் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஐஸ் 200 மில்லிக் கிராம், கஞ்சா ஆயிரத்து 400 மில்லிக் கிராம் மற்றும் 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

☞2

## கேகாலையில் ஒருவர் சுட்டுக் கொலை

கேகாலை, கலபிட்டமட – துனமால பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் சாவடைந்தார்.

குறித்தசம்பவம்நேற்றுப்பகல்இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

துனமால பகுதியில் கப்ரக வாகனமொன்றில் பயணித்து கொண்டிருந்த ஒருவர் மீதே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது.

உயிரிழந்தவர் துனமால இறப்பர் தோட்டக் காவலாளியாகப் பணியாற்றியவர்

☞2

## கறுப்பு ஜூலை நினைவாக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



கறுப்பு ஜீலை கலவரத்தை நினைவு கூர்ந்தும் ஒற்றுமையை வலிறுயுறுத்தியும் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் மூவின மக்களின் பங்கு பற்றுதலுடன் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. வவுனியா பழைய பேரூந்து நிலையம் முன்பாக மாலை சில மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'இனியும் கலவரம் வேண்டாம், பிரிவினைகள்

☞2

## இனப்பிரச்சினையை திட்டமிட்டு மதப் பிரச்சினையாக்குகின்றார்கள்

### சித்தார்த்தன் எம்.பி குருந்தூர்மலையில் குற்றச்சாட்டு



இனப் பிரச்சினையை மதப் பிரச்சினையாகத் திட்டமிட்டு மாற்றுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

குருந்தூர்மலையில் தமிழர்கள் பொங்கலிடுவதற்கு பிக்குகளும் சிங்களவர்களும் பொலிஸாரும் தடைவிதித்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அடுப்பினை கற்பூரத்தை வைத்து மூட்டுகின்ற போது பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தனது சப்பாத்து காலினால் அந்த கற்பூரத்தினை அணைத்துள்ளார்.

இந்த நாட்டிலே இனப்பிரச்சினை மொழி அடிப்படையிலானதாக இருந்தது, தற்போது அது மதப் பிரச்சினையாக மாறிக் கொண்டு வருகிறது. திட்டமிட்டு அப்படி இங்கு அதனை மாற்றி வருகிறார்கள். இவர்கள் இதனை

☞2

## வடமராட்சி கிழக்கிலும் காற்றாலைகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கிலும் மின்சார உற்பத்திக்கான காற்றாலை பொருத்தப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல்கள் வியாழக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது என்று மீனவ அமைப்புக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியை உள்ளடக்கிய மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இரு நிறுவனங்கள் இந்த காற்றாலைகளைப் பொருத்தவுள்ளன. இதற்கான முன் ஆயத்நக் கலந்துரையாடலே பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பன் முதல் மணற்காடு வரையிலும், குடாரப்பு முதல் மருதங்கேணி வரையிலும் உள்ள பகுதிகளில் இந்தக்

☞2

## இலங்கையர் ஊடுருவல் அதிகரிப்பாம் இந்தியத் தீவுகளில் தீவிரமான தேடுதல்



எவரும் சிக்கவில்லை

(ந.லோகதயாளன்)

இந்திய-இலங்கை இடையே உள்ள தமிழ்நாட்டினை அண்டிய பகுதி தீவுகளில் இறங்கி பொலிசார் கடந்த சில தினங்களாகத் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குள் ஊடுருவல்கள் அதிகரித்திருப்பதான தகவல்களை அடுத்து தமிழக பொலிசார் மற்றும் கடலோரக் காவல்படையினர் இணைந்து இந்தத் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இருதினங்களாக இடம்பெறும் இத் தேடுதல் வேட்டையில் தமிழ் நாட்டின் கரையோரத்தில்

☞2

## நெடுந்தீவைச் சூழ 10 கடற்படை முகாம்கள் இருந்தும் ஏன் ஊடுருவலை தடுக்கவில்லை?

### சிறிதரன் எம்.பி. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கேள்வி

நெடுந்தீவைச் சூழ பத்து கடற்படை முகாம்கள் உள்ளன அதைவிட இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சரும் இருக்கின்றார் ஆனால் உள்ளூர் இழுவைப்படகுகளை கூட கட்டுப்படுத்த முடியவில்லை இந்திய இழுவைப்படகளை கட்டுப்படுத்த நாங்கள் கூட்டாக இந்தியாவில் போய் பேசுவோம் என்று மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி மக்களை பிழையாக வழிநடத்துகிறார் என அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நெடுந்தீவு பிரதேசத்துக்கான பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றுப் பகல் 9.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது

இக்கூட்டத்தில், உள்ளூர் மீனவர்களால் சட்டவிரோத தொழில்கள் எதுவும்

☞2

## தொழில்தேடி வெளிநாடு செல்வோருக்கு குடாநாட்டில் பயிற்சி நிலையம் அமையும்

### அமைச்சர் மனுஷ தெரிவிப்பு; இன்றும் நாளையும் முற்றவெளியில் கண்காட்சி

வெளிநாட்டில் வேலை தேடிச் செல்வோருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான மையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைவதற்கான காணியை பெற்றுத்தருமாறு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரை சந்தித்து கலந்துரையாடினேன்.

மேலும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை-யான குளோபல் ஃபேர் - 2023 நாளையும் (இன்று) மறுநாளும் (நாளை) யாழ்ப்பாணம் முற்ற வெளி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஆட்கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களை தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கு பயிற்சி பெறாதவர்களுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லவும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் செயற்பட்டு வருகிறோம்.

கொழும்புக்கு வந்து எமது அமைச்சின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும், நீங்கள் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்குகின்றோம்.

ஊழியர்சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிநாட்டு

☞2

## இன்று முதல் மீண்டும் வடக்குக்கு தொடருந்து

கொழும்பு, ஜூலை 15

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான தொடருந்து சேவை மீண்டும் இன்று முதல் தொடங்குகின்றது. வவுனியா முதல் அனுராதபுரம் வரையிலான தொடருந்துப் பாதைத் திருத்தப் பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த சேவைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்பவுள்ளன.

இதேவேளை, நல்லூர் ஆலய திருவிழாவுக்காக வருகின்ற பக்தர்களின் நலன்கருதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவுநேர விசேட அதிசொகுசு கடுகதி சுற்றுலா தொடருந்து சேவை ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் தொடங்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக பதுளை ஓடிசி, சீதாவாகை ஓ டி சி போன்று யாழ்ப்பாணம் ஓடிசி தொடருந்து சேவை ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடங்கப்படும் என்றார் அவர்.

☞2

## இலங்கையை கடந்த நடிகர் ரஜினிகாந்த்



தென்னிந்தியாவின் பிரபல நடிகரும் தமிழ் சுப்பர் ஸ்டாருமான ரஜினிகாந்த் நேற்று பகல் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வேறு நாடு ஒன்றுக்குப் பயணித்தார்.

இலங்கை ஊடாக வேறு நாடு ஒன்றுக்குச் செல்வதற்காக அவர் சில மணி நேரம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கி இருந்தார் என்று அவருக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு அரசியல்வாட்டாரங்களில் அதிகமாக இருக்கின்றது.

அரசுத்தலைவர் மற்றும் ஆட்சியாளர்களின் இந்தச்செயல் - ஜனநாயகவிரோதச் செயல் - மக்களின் வாக்குரிமையைத் தடுத்து நிறுத்திய செயல் - நீதிமன்றத்தின் கடுமையானவிமர்சனங்களுக்குள்ளாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு அஞ்சியே, தனிநபர் பிரேரணை மூலமாக நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான முன்னகர்வுகளை ஆட்சித் தரப்பு மேற்கொண்டது. நீதிமன்றத்தீர்ப்புக்கு முன்பாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால், தீர்ப்பு தமக்குப் பாதகமாக வந்தால் கூட, மீண்டும் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரல், தேர்தல் ஏற்பாடுகளைச் செய்தல் என்ற வகையில் குறைந்தது சில மாதங்களையாவது கடத்திவிடலாம் என்பதே ஆளும்தரப்பின் திட்டமாக இருந்தது. ஆனால், அந்தச் சட்ட மூலத்தை எதிர்த்து தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் நீதிமன்றத்தை நாடியதன் மூலம் ஆளும்தரப்பின் அந்தக்கனவிலும் மண் விழுந்துவிட்டது. இனி பவ்ரலின் வழக்குத் தீர்ப்பு வரும் வரைக்கும் அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது. அதற்கிடையில் அந்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்றும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்களின் கருத்துக்கணிப்பும்மேற்கொள்ளப்படவேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களமும் அறிவித்துவிட்டது.

இதனால் நீதிமன்றத் தீர்புத் தமக்குப் பாதமாக அமைந்தால் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தை எப்படிச் சமாளிப்பது, ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பது எப்படி என்பதே இப்போது ஆளும் தரப்புக்குள் தீவிரமாக அலசப்பட்டு வருகின்றதாம்.

**- இடிமின்னல் -**
(idiminnal23gmail.com)

## குருந்தூர்மலையில் தமி ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை 8 மணியளவிலேயே அந்த இடத்தை வந்தடைந்த பிக்குகளும் சிங்களவர்களும் விகாரையில் வழிபாடுகளை நடத்தினர். அதற்கு எந்த இடையூறுகளையும் விளைவிக்காது காத்திருந்த தமிழர்கள் அதன் பின்னர் அங்கு பொங்கலிடுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கினர். அப்போது தொல்பொருள் திணைக்கள அதிகாரி வந்து தமது பகுதிக்குரிய நிலத்தில் தீ மூட்டுவது சட்டத்திற்கு முரணானது என்றார். பின்னர் அவருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் நிலத்தில் தீ மூட்டாது, கிழே கற்களை வைத்து அதன் மீது தகரம் வைத்து அதன் மீது கற்களை வைத்துப் பொங்குவதற்கு அவர் அனுமதி வழங்கினார்.

அதற்கேற்ப அடுப்பை வைத்து பொங்கலிடும் முயற்சியில் தமிழர்கள் இறங்கியபோது பிக்குகளும் சிங்களவர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முரண்பட்டனர். இதையடுத்து பொலிஸார் தலையிட்டு அந்த இடத்தில் பொங்கலிட வேண்டாம் என்று தடுத்தனர். முரண்பாடு ஏற்படும்நிலைஇருப்பதால்மலையிலிருந்து இறங்கி கீழே பொங்கலிடுமாறு அறிவுத்தினர். ஆனால் ஆலயம் எங்குள்ளதோ அங்குதான் பொங்கிலிடுவது சைவ மரபு, அதனால் ஆலயம் இருக்கும் இடத்திலேயே பொங்கலிட முடியும் என்று தமிழர்கள் வாதிட்டனர். ஆனால் அதனை ஏற்காத பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது சப்பாத்துக் கால்களால் பொங்கலுக்கு இடப்பட்ட தீயைத் தட்டிவிட்டு பொங்கலை நிறுத்தினார்.

இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் பொலிஸாரின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் இடம்பெற்றது. தொல்பொருள் திணைக்கள அதிகாரியும் அதில் கலந்துகொண்டார். நிலத்தில் தீ மூட்டாமல் பொங்கலிடமுடியும் என்று அவர் தெரிவித்த விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் சிங்களவர்களும் பிக்குகளும் அடம்பிடித்தனர். அந்த இடத்தில் அவர்களுக்கு ஆதரவாகவே பொலிஸார் செயற்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கலந்துரையாடலில் எந்த இணக்கத்துக்கும் வருவதற்கு சிங்களவர்கள் மறுத்ததைத் தொடர்ந்து, பொங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடத்திலேயே அமர்ந்த தமிழர்கள் சிவபுராணம்பாடி வழிபாட்டில் ஈடுபட்டனர். இதற்கு ஏட்டிக்குப்போட்டியாக பிக்குகள் சிலர் பிரித் ஓதினர். இப்படித் தொடர்ந்து முரண்பாட்டை சிங்களவர்கள் ஏற்படுத்தி வந்த நிலையில், பொலிஸார் தமிழர்களை அங்கிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை பலவந்தமாகப் பொலிஸார் இழுத்து அகற்றியதில் அவர் பாதிக்கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதுபோன்று பொதுமக்கள் பலரும் பொலிஸாருடனான தள்ளுமுள்ளில் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

இதன் பின்னரும் மக்கள் கலைந்து செல்லாது தர்க்கப்பட்டு நின்ற நிலையில் வேலன் சுவாமிகளின் வேண்டுகோழுக்கிணங்க 30 நிமிடங்கள் அமைதியாகத் தேவாரம் பாடிவிட்டு செல்வதற்குத் தமிழர்கள் பொலிஸாரிடம் அனுமதிகேட்டனர். அதற்கு அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து தேவாரம் பாடிவிட்டு ஆலயம் அமைந்திருந்த பகுதிக்கு முன்பாக கல் ஒன்றை வைத்து அதில் தேங்காய் அடித்துவிட்டு பொங்கலுக்காகக் கொண்டுசென்ற பாலினை ஊற்றி, அபிசேகம செய்து, பூக்களை போட்டு வழிபட்டுவிட்டு தமிழர்கள் அங்கிருந்து வெளியேறினார்கள்.

## நால்வர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த இருவர், புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்ட நால்வரும் 20 முதல் 30 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

## கேகாலையில் ஒருவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கலபிட்டமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

## கறுப்பு ஜூலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டாம், சமூக ஒற்றுமையை குலைக்காதே, ஆட்சியாளர்களே இனவாதத்தை தூண்டாதே, யாழ் நூலகத்தை எரித் தது இனவாதமே, நாடு முழுவதும் ஜூலை கலவரத்தை திட்மிட்டு நடத்தியது ஆட்சியாளர்களே' என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

மாறி மாறி ஆடசிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன என்பனவே இந்த நாட்டின் இன நல்லுறவு

சீர்குலைந்து கலவரங்கள் ஏற்படக் காரணம் எனவும், அவ்வாறான ஆட்சியாளர்களை விரட்டியடிக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்து தெரிவித்தனர்.

## வடமராட்சி கிழக்கிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காற்றாலைகள் பொருத்தப்படவுள்ளன.

நோயல் செல்வநாயகம் என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள ஸ்ரோனோக் மற்றும் முசலிப்பிட்டி ஆகிய பெயர்களையுடைய இரு நிறுவனங்களே இந்த காற்றாலைகளை அமைக்கவுள்ளன.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்கில்கொழும்பில்உரியதிணைக்களங்களின் அனுமதியை பெற்று வந்து அது தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடலை பிரதேச செயலகத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மக்கள் ஆகியோருடன் அந்த நிறுவனங்கள் நடத்தியுள்ளன.

இந்த இடங்களில் முதல் கட்டமாக 21 காற்றாடிகள் பொருத்தப்படவுள்ளன. விரைவில் உரிய திணைக்களங்கள் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் இடங்களை நேரில் பார்வையிடவுள்ளனர்.

## இலங்கையர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து 5 முதல் 8 நோட்டிக்மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவுகளில் இத்தேடுதல் வேட்டை இடம்பெறுகின்றது.

இதுவரை 20 தீவிகளில் இவ்வாறான தேடுதல் வேட்டை இடம்பெற்றுள்ளது. ஆனால், சந்தேகநபர்களோ அல்லது கடத்தல்ப் பொருள்களோ சிக்கவில்லை. அந்தத்தீவுகளில் பலர் நீண்டகாலம் தங்கிச் சென்றமைக்கான தடயங்கள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அவை மீனவர்களால் பயன்படுத்தப்பட்டவையா, ஊடுருவல்காரர்களால் பயன்படுத்தப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## தொழில்தேடி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொழில்வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகள் க்ளோபல் ஃபேர் -2023இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

## இலங்கையை கடந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவின் சென்னையில் இருந்து ஸ்ரீலங்கன் விமானத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கட்டுநாயக்கவுக்கு வந்த ரஜினிகாந்தை விமான நிலையத்தின் சிறப்பு அதிதிகள் முனையத்துக்கு அழைக்கப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. (02)

## நெடுந்தீவைச் சூழ 10 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளப்படாத நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள கடல்வளம் இந்திய இழுவைப் படகுகளாலும் யாழ்ப்பாணத்து இழுவைப் படககளாலும் தொடர்ந்து அழிக்கப்பட்டுவருவதாக கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை தடுத்து தமது வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கு உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை சமாசம் முன்வைத்தது இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவிற்கு மிடையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டு சிறிது நேரம் அமைதியின்மை நிலவியது நெடுந்தீவு கடலில் நாளாந்தம் 400 முதல் 500 உள்ளூர் மற்றும் இந்திய இழுவைப்படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. இதன் முலலம் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்றன. நெடுந்தீவு பிரதேசத்தை சூழ பத்து வரையான கடற்படை முகாம்கள் உள்ளன. அப்படியிருந்தும் கடல் படையாலும் கடற்தொழில் அமைச்சராலும் இதனைத் தடுக்க முடியவில்லை இந்திய இழுவைப்படகளை கட்டுப்படுத்த நாங்கள் கூட்டாக இந்தியாவில் போய் பேசுவோம் என்று மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம். நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அந்த மக்கள் கருத்துக்களை தெரிவிக்க இடமளிக்கப் படவேண்டும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைகள தொடர்பாக நாங்கள் இந்தியாவில் போய் பேசுவோம் என்று எங்கும் நாங்கள் சொல்லவில்லை மக்களிடம் தவறான கருத்துக்களை கருத்துக்களை கூறி மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம். யாழ்ப்பாணத்தில் நாங்கள் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினோம் அப்படி எந்தவிதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை உள்ளூர் படகுகளை தடுக்க வேண்டிய பொறுப்பு கடற்படைக்கு உள்ளது.

1991 ஆம் ஆண்டு அமைச்சர் இங்கு வரும் போது பொலீஸ் இருக்கவில்லை கடற்படை இருக்கவில்லை என்று அவரே சொன்னார் ஆனால் இப்போது கடைப்படை இருக்கின்றது பொலீஸ் இருக்கின்றது சகல பாதுகாப்புகளும் செய்யப்பட்டுள்ளன அமைச்சர் இருக்கின்றார் ஆனாலும் இந்த மக்களினுடைய வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது இதனைத் தடுப்பதற்கான முடிவை யார் எடுப்பது? கடற்படையா அல்லது இளைஞர்களா? என்றும் சிறிதரன் மேலும் தெரிவித்தார்.

இதற்கு அமைச்சர் பதிலளித்தபோதே இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

# இலங்கை பெற்ற கடனில் பெருமளவை வடக்கு கிழக்குக்காகவே பெற்றோம்

## அமைச்சர் பந்துல இப்படித் தெரிவிப்பு



இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டுகடனில், பெருமளவான தொகை வடக்கு, கிழக்கிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனாகும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் கடன் உதவித் திட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்ட பேருந்துகளில் 24 வடக்கு மாகாண சபைக்காக வியாழக்கிழமை கையளிக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்தசிலதசாப்தங்களாகஏனையபகுதிகளை விடவும் வடபகுதியில் சொத்துக்கள் பெருமளவில் அழிவடைந்துள்ளன.

இதன்காரணமாக, வடக்கின் வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் முதலான திட்டங்களை அதிகாரத்தில் இருந்த ஆட்சிகள் நடைமுறைப்படுத்தின. இதற்காகப் பெருளவு கடன் பெறப்பட்டுள்ளது.

இந்த கடன் மூலம் அனைத்துப்பாதைகளும் சீரமைக்கப்பட்டன. முழுமையாக அகற்றப்பட்டிருந்த தொடருந்து வழித் தடங்களும் சீர்செய்யப்பட்டன.

மின்சார விநியோகம், தொலைதொடர்பு சேவைகள், நீர்ப்பாசன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உலகவங்கி, சர்வதேசநாணயநிதியம், ஆசிய அபிவிருத்திவங்கி, மற்றும் ஏனைய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மூலமே இவை எல்லாம் முன்னெடுக்கப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் பரவல், அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளால் தற்போது வெளிநாட்டு கடனுக்கான தவணையை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நிதி இல்லை.

ஜனாதிபதி, மத்திய வங்கி நிதி அமைச்சு மற்றும் சர்வதேச நிதி நிபுணர்கள் இணைந்து கடனை மறுசீரமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் இந்த வெளிநாட்டு கடனை மறுசீரமைத்து நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார் அமைச்சர் பந்துல குணவர்தன.

# கல்முனை கடற்கரையில் நேற்று சுத்தப்படுத்தல் பணி







(பாறுக் ஷிஹான்)

இராணுவத்தினரால் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தல் பணிகள் நேற்று இடம்பெற்றது

இலங்கை இராணுவத்தின் 24 வது காலாட்படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் இராணுவ முகாம் சூழல் அமைந்துள்ள கடற்கரை மற்றும் அண்டிய பல பகுதிகளில் சிரமதான பணியினை இராணுவத்தினர் முன்னெடுத்தனர். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் கடற்கரை வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு கல்முனை மாநகரசபையின் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தது.

கல்முனை உப பிரதேச செயலக சமுர்த்திப் பயளாகிளும் இராணுவத்தினருடன் சேர்ந்து பங்களிப்பினை வழங்கி சிரமதான பணியில் ஈடுபட்டனர். எதிர் காலங்களில் கல்முனை பிராந்தியத்தில் குப்பை கூழமில்லாமல் சுத்தமாக பேணுவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இராணுவ உயரதிகாரிகளினால் விரிவாக ஆராயப்பட்டது.

## இனப் பிரச்சினையை திட்டமிட்டு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டுமென்றே உருவாக்குகின்றார்கள் எனத்தான் நான் நினைக்கின்றேன்.

இந்த நாட்டில் பௌத்த கலாச்சாரங்கள் மட்டும்தான் இருக்கின்றது எனக் காட்டுவதற்காக இதனைச் செய்கிறார்கள். இதனை முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் எங்களால் இயன்ற அளவுக்கு முயற்சித்து இவைகளை நிறுத்துவதற்கு முயல்வோம்.

இந்தப் பகுதிகளை முழுமையாக அவர்கள் ஆக்கிரமிப்பதைத்தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை தடுப்பதற்காக ஊர் மக்களுடன் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக இருக்கின்றோம். நாங்கள் அனைவரும் இணைந்தே இதனை முழுமையாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு ஒரே ஒரு வழி, சாத்வீகமான வழிதான் தற்போது இருக்கின்றது. அந்த வழியிலே நாங்கள் நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இதை மீண்டும் தமிழ் சைவ மக்களுடைய ஆலயமாக மாற்ற வேண்டும் - என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியைச் சேர்ந்தவரான சட்டத்தரணி காண்டீபன் தெவித்ததாவது:

பன்னாட்டுச் சட்டங்கள், சமவாயங்கள் என்பவற்றை ஏற்றுக்கொண்டு ஒழுகுவதாக தனது ஒற்றையாட்டி நாடாளுமன்றத்தில் இலங்கை சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. ஆனால் இந்தச் சட்டங்கள், சமவாயங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் மக்களின் வழிபாட்டு உரிமை இங்கு தமிழர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. பொலிஸார் முற்றாகச் சிங்களவர்களுக்குச் சார்பாகச் செயற்பட்டு இந்தப் பொங்கலைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெண்கள் என்று பார்க்காமல் பலவந்தமாகச் செயற்பட்டும் தாக்கியும் எம்மைப் பொங்கலிட விடாமல் அகற்றியுள்ளார்கள். காயப்படுத்தியுள்ளார்கள். இதுவே ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவர் மீது இப்படி உங்களால் கைவைக்க முடியுமா என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றோம். இங்கே சிங்களவர்களுக்கு ஒரு நீதி தமிழர்களுக்கு ஒரு நீதிதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதனால்தான் இலங்கையில் உள்நாட்டு நீதி என்பது தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைக்காது என்று கூறுகின்றோம். சர்வதேச நீதிதான் எமக்கு வேண்டும் என்று கறுகின்றோம்.

இங்கே வந்து குழப்பத்தை விளைவித்து தமிழர்கள் பொங்கலிட முடியாமல் தடுத்த பிக்குகள் மற்றும் சிங்களவர்கள் மீது ஐசிசி சட்டங்களின் கீழும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் நடவடிக்கைஎடுத்து அனைவரையும் கைது செய்யவேண்டும் - என்றார்.

# ஊட்டச்சத்துள்ள உணவை உண்பதற்குப் பதில் வெறுமனே வயிற்றை மட்டுமே நிரப்புகிறோம்

## பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் வேதனை

இலங்கையில் நிதிநெருக்கடி தொடரும் நிலையில் அனைத்து கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைப்பதை இலங்கை உறுதிசெய்யவேண்டும்எனசர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் நிதி நெருக்கடி கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பாலூட்டும்தாய்மார்களிற்குஊட்டசத்து கிடைப்பதில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஆய்வறிக்கையில் சர்வதேச மன்னிப்புச்சபைஇந்தவேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்த ஆய்வின் போது வீழ்ச்சியடையும் வருமானங்கள் வாழ்வாதார இழப்புகள் பணவீக்கம் போன்றவை பெண்களின் கொள்வனவு சக்தி மீதுதாக்கம் செலுத்தியுள்ளதைசர்வதேசமன்னிப்புச்சபை கண்டறிந்துள்ளது.

நிதிநெருக்கடி கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தையை பிரசவித்ததாய்மார்களுக்கான அரசாங்கத்தின் நலன்புரிதிட்டங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவது இந்த ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

கொழும்பில் வறுமைகோட்டுக்கு கீழே வாழும் பெண்களை அடிப்படையாக வைத்தே இந்த ஆய்வு இடம்பெற்றுள்ளது.இந்தஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள்சுகாதாரபணியாளர்கள் சிவில்சமூகத்தினர் கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் உட்பட 45 பெண்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியுள்ளனர்.

இவர்கள் பல்வேறு இன மற்றும் மதபின்னணியை கொண்டவர்கள் என்பதுடன் கொழும்பின் வறிய பகுதிகளில் வாழ்பவர்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் கடுமையான தாக்கம் காரணமாக சுகாதாரம் ஊட்டச்சத்தும் பின்னிலைக்கு தள்ளப்பட்டுள்ளன இந்த நிலை கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் மீது கடும் தாக்கத்தை எற்படுத்தியுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் தினுசிகா திசநாயக்க அறிக்கையொன்றில்தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபை தொடர்புகொண்ட பெண்கள் உணவுகள் கிடைக்காமை திரிபோசா ஒழுங்கற்றவிதத்தில்வழங்கப்படுதல்போன்ற பிரச்சினைகளை சுட்டிக்காட்டியுள்ளனர்.

உணவுப்பொருளகளின் விலை அதிகரிப்பு காரணமாக நாங்கள் சத்துள்ள பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்பதற்கு பதில் வெறுமனே வயிற்றை நிரப்புகின்றோம் என கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றிற்கு மூன்று தடவை உணவு உண்பதற்காக நாளாந்தம் உண்ணும் உணவை பலர் குறைத்துக்கொண்டுள்ளனர், சிலர் நாளாந்த உணவை இரண்டு தடவையாக குறைத்துக்கொண்டுள்ளனர்.

நாங்கள் காலையிலும் இரவிலும் உணவு உண்கின்றோம் மதிய உணவைதவிர்த்துக்கொள்கின்றோம் என கர்ப்பிணி தாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களில் பெரும்பாலானவை மாமிசம், காய்கறி, பழங்கள், பால் போன்றவற்றை உண்பதை பெருமளவு குறைத்துள்ளதாக தெரிவித்துள்ளன. இது ஊட்டச்சத்தின்மைக்கு வழிவகுக்கக்கூடும், இது தாயின் வயிற்றில் உள்ள கருவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

முன்னர் வாராந்தம் மாமிசம் அல்லது மீன் சாப்பிட்ட குடும்பங்கள் தற்போது மாதத்துக்கு ஒருமுறை அல்லதுகாசுள்ளபோதுசாப்பிடுகின்றன என பாலூட்டும் தாய் ஒருவர் தெரிவித்துள்ளார். (05)

# வழங்கிய வாக்குறுதிகளை ரணில் நிறைவேற்றியுள்ளார்

## பெரமுன சார்பில் சந்திரசேன பாராட்டு

பொருளாதார ஸ்திரப்படுத்தல், நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு உறுதிப்படுத்தல் ஆகியவற்றை பாதுகாப்பதாக வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றியுள்ளார்.

நாட்டுக்காக அவர் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கட்சி என்ற ரீதியில் கடந்த ஆண்டு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டோம். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் மக்கள் போராட்டத்தை பயங்கரவாத போராட்டமாக மாற்றியமைத்து அதை பொதுஜன பெரமுனவை நோக்கி திசைத்திருப்பி விட்டார்கள்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பேரவாவியில் வீழ்த்தி கடுமையாக தாக்கப்பட்டார்கள். எமது சொத்துக்கள் மற்றும் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறான பின்னணியில் கட்சி என்ற ரீதியில் மீண்டும் பலமடைந்துள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷர்கள் மீதான மக் கள் அங்கீகாரம் குறைவடையவில்லை. வீழ்ந்த நிலையில் இருந்து மீண்டெழுந்துள்ளோம்.

அறிவார்ந்த மக்கள் எம்முடன் உள்ளார்கள். எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் எமது பலத்தை ஜனநாயக ரீதியில் உறுதிப்படுத்துவோம்.

பொருளாதாரப் பாதிப்பு அரசியல் நெருக்கடியாக மாற்றமடைந்த போது அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ பாரம்பரிய அரசியல் முறைமைக்கு அமைய சகல எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். ஆசை ஆனால் பயம் என்ற காரணத்தால் எவரும் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்துக்கு முழுமையான ஒத்துழைப்புவழங்கினோம்.

பயங்கரவாத போராட்டத்தால்அப்போதையஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் நாடாளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

பொருளாதார மீட்சி மற்றும் நாட்டில் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை மாத்திரம் ஜனாதிபதியிடம் முன்வைத்தோம்.

குறுகிய காலத்துக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதாக வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார். நாட்டுக்காக அவர் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார். (05)



# இலங்கைப் பெண்களுக்கு பேஸ்புக்கால் பாதிப்பாம்

இந்த வருடத்தின் கடந்த 6 மாதங்களில் சமூக வலைதளங்கள் ஊடாக 9 ஆயிரத்து 858 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இலங்கை கணினி பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். முறைப்பாடு அளித்துள்ளவர்களில்பெரும்பாலானோர் பெண்கள் என்பது தெரியவந்துள்ளது. அவற்றில் 2 ஆயிரத்து 330 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், இந்த வருடத்தில் பதிவாகியுள்ள அதிக முறைப்பாடுகள் மே மாதத்தில் பதிவாகியுள்ளன எனத் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் கணக்குகளை ஹேக் செய்தல், போலி பேஸ்புக் கணக்குகளைப் பயன்படுத்துதல், ஒன்லைனில் வேலை தருவதாக கூறி பண மோசடி செய் தல் போன்றவை இந்த முறைப்பாடுகளில் அடங்குகின்றன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



## தெற்காசிய உடற்கட்டமைப்பு போட்டியில் இலங்கைக்கு 3ஆம் இடம்

மாலைதீவில் நடைபெற்ற 13 ஆவது தெற்காசிய உடற்கட்டமைப்பு போட்டியில் இலங்கை அணி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு தங்கப் பதக்கம், 4 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் என மொத்தம் 6 பதக்கங்களை தன்வசப்படுத்தியுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய 6 வீரர்களும் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் சாம்பியன்ஷிப்பை இந்தியா வென்றதுடன், மாலைதீவு அணி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. (05)

# நாட்டின் நிதி மோசடிகளில் ஐ.தே.க. ஒருபோதுமே சம்பந்தப்படவில்லை

## அல ஜாகொட அடித்துக் கூறுகிறார்

நாட்டின் ஊழல் மோசடி களுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஒருகாலத்திலும் சம்பந்தப்பட்டதில்லை. கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டுவந்த பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்களும்தற்போதுபொய் என உறுதியாகி இருக்கின்றன என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அல ஜாகொட தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டு மக்கள் கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலைமையை சமாளித்து நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்ரமசிங்க இந்த சவாலை ஏற்றுக்கொண்டு நாட்டின் ஜனாதிபதியாகி இந்த மாதம் ஒருவருடம் பூர்த்தியாகிறது. இந்த ஒருவருட காலத்தில் நாட்டின் பொருளாதார நிலையை படிப்படியாக ஸ்திர நிலைக்குக் கொண்டு வர ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதை மக்கள் கண்கூடாகவே கண்டு வருகின்றனர்.

அத்துடன் உலகில் பணவீக்கத்தில் உயர்த்த தரத்தில் இருந்த எமது நாடு தற்போது அந்த நிலையில் இருந்து கீழ் நிலைக்கு வந்திருக்கிறது. மத்திய வங்கி எதிர்வு கூறும் வகையில், எதிர்வரும் 3 மாதங்களில் நாட்டின் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டுவரும் திறமை எமக்கு இருக்கிறது.

உலகில் வேறு நாடுகள் சர்வதேசநாணயநிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியாமல் போன நிலையில், எமக்கு அந்த உதவியை பெற்றுக்கொள்ள முடியுமாகியது. அதனால் நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கக்கூடிய தலைவராக ரணில் விக்ரமசிங்கவின் பெயர் நாட்டில் உயர்ந்த இடத்தில் பதிவாகும்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்கவை ஏற்றுக் கொள்ளாத பலர் இன்று அவர் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்கின்றனர். அதனால் இன்று அவர் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் நாளை ஒரு நாளில் அவரைஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனால் அரசியல் தொடர்பில் நன்கு அறிந்தவர்கள் தற்போது தெரிவித்திருக்கும் புதிய அரசியல் சமன்பாடுதான், ஐக்கிய தேசிய கட்சி பூச்சிய நிலைக்கு வீழ்ச்சியடைந்தால் நாடு அந்த நிலைக்கு வீழ்ச்சியடையும் ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் எழும்போது நாடும் மீள கட்டியெழுப்பப்படும் என்பதாகும். அதனால் தற்போது ஐக்கிய தேசிய கட்சியை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்றன. அதேநேரம் நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் நடவடிக்கையும் படிப்படியாக இடம்பெற்று வருகிறது.

மேலும் ஐக்கிய தேசிய கட்சி இந்த நாட்டின் ஊழல் மோசடிகளுடன் ஒருபோதும் சம்பந்தப்பட்டதில்லை. கடந்த காலங்களில்தெரிவிக்கப்பட்டு வந்த 10 பில்லியன் ரூபா மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்கள் தற்போதுபொய்யாகிஉள்ளன. என்றாலும் ரணிவ் விக்ரமசிங்க பிணைமுறியில் 12 பில்லியன் ரூபாவை மத்திய வங்கியில் வைப்பில் வைத்துக்கொண்டே இந்த நடவடிக்கையைகையாண்டு வந்தார். அதனால்பிணைமுறி மோசடியால் நாட்டுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

மேலும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் வரி விலக்களிப்பின் மூலம் சுமார் 600 பில்லியன் ரூபா நாட்டின் வருமானம் இல்லாமல் போனது. அதன் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. இவ்வாறு வங்குரோத்து அடைந்த நாட்டையே ரணில் விக்ரமசிங்க பொறுப்பெடுத்து தற்போது, நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டி வருகிறார். இன்னும் சில மாதங்களில் எமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து முற்றாக நீங்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார். - என்றார். (05)

# பாப்பரசரின் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேரருட்தந்தை பிறைன் உடேக்குவே யாழ். மறை மாவட்டத்துக்கு மேய்ப்புப் பணி விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

இம்மாதம் 25 ஆம் திகதி யாழ். மறை மாவட்டத்துக்கு திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி வருகைதந்து, குருநகர் புனித யாகப்பர் தேவாலய திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களைத் தரிசித்து குருக்கள், துறவியர், இறைமக்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

மேலும் 26 ஆம் திகதி இளவாலை புனித அன்னாள் தேவாலயத்தில் நடைபெறவுள்ள திருநாள் திருப்பலியில் பங்குபற்றுவதுடன், அன்று மதியம் வன்னியில் இன அழிப்பு யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை தரிசித்து, அங்குள்ள மக்களை சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து, முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயத்தில் நடைபெறவுள்ள நற்கருணை ஆராதனையிலும் பங்கெடுப்பார். - என்றார். (05)

# அரச வைத்தியசாலை சி.டி.ஸ்கானர்களில் பெரும்பாலானவை முற்றாக செயலிழப்பு

அரசாங்க வைத்தியசாலைகளில்பெரும்பாலான சிடி ஸ்கானர்கள் செயல் இழந்துவிட்டன என மருத்துவதுறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் 44 சிடிஸ்கான் இயந்திரங்கள் உள்ளன என அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்புதேசியவைத்தியசாலையில் 12 சிடிஸ்கான் இயந்திரங்கள் உள்ளன, குருநாகல் கராப்பிட்டிய, திருகோணமலை, அம்பாந்தோட்டை, பதுளை, இரத்தினபுரி, களுத்துறை, ஹொரனதேசியபல்வைத்தியசாலை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை, மாத்தறை ஆகியவைத்தியசாலைகளில் சிடி ஸ்கானர்கள் இயங்கவில்லைஎனஅந்தஅமைப்பு தெரிவித்துள்ளது.

சில வைத்தியசாலைகளில் சிடி ஸ்கானர்கள் பல மாதங்களாக இயங்கவில்லை.

இதனால் வறியமக்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களால் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியாது. இதன் காரணமாக அரசாங்கம் இந்த இயந்திரங்களைத் திருத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



இந்த இயந்திரங்கள் இயங்க மறுத்துள்ளதால் சில நோய்களை அடையாளம் காண்பதில் மருத்துவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் குழப்பங்கள் ஏற்படுகின்றன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (05)

# வெற்றிபெற முடியாது என்பதால் தேர்தலை அரசு பிற்போட்டுள்ளது!

## ரஞ்சித் மத்துமபண்டார சாட்டை

தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்ற காரணத்தினால்தான், உள்ளூராட்சி மன்றத்தேர்தலைஅரசாங்கம் பிற்போட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரஞ்சித்மத்துமபண்டார தலைமையிலான குழுவினர் தேர்தல் ஆணைக் குழுவிற்கு சென்றிருந்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில் -



'உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பாளராக களமிறங்கிய, அரச ஊழியர்களின் சம்பளம் இல்லாது போயுள்ளது.

அரசாங்கத்தின் தவறினால்தான் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அரச ஊழியர்களின் விடுமுறையும் ரத்தாகியுள்ளது.

சிலருக்கு விடுமுறை எடுத்த காரணத்தால், அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

நிதியில்லாத காரணத்தால்தான் உள்ளூராட்சி மன்றத்தேர்தலைநடத்தவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது.

மறுபுறம், நாட்டில் போதியளவு நிதி உள்ளதாகவும் பொருளாதாரம்வலுவடைந்து வருவதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

இதிலிருந்தே, தங்களுக்கு வெற்றி கிடைக்காதுஎன்றகாரணத்தால்தான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டுள்ளது என்பது தெளிவாகிறது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காவல்துறை நீதி

**இலங்கைக் காவல்துறையினர் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் ஏவலாளிகளாகவே செயற்படுவார்கள் என்பதையும் அவர்கள் மூலம் தமிழர்களுக்கு உள்நாட்டில் ஒருபோதும் நீதி கிட்டாது என்பதும் மீண்டும் ஒரு தடவை குருந்தூர்மலையில் நிரூபணமாகி இருக்கின்றது.**

**குருந்தூர்மலையில் தமிழர்கள் விக்கிரகங்களைப் பிரதிஸ்டை செய்து பொங்கல் வைக்கப்போகிறார்கள் என்று குருந்தூர்மலை விகாராதிபதி கல்கமுக சந்தபோதி தேரர் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்திய உடனேயே, இனமுறுகல் ஏற்படப்போகிறது என்று நீதிமன்றத்தை நாடுகின்றார்கள் காவல்துறையினர்.**

**இதேபோன்ற ஒரு குற்றச்சாட்டு அதே தேரருக்கு எதிராக காவல் நிலையத்தில் முன்வைக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளக்கூட அங்கிருக்கும் அதிகாரிகள் தயாராக இருக்கமாட்டார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் தேரர் அடிப்படையற்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைத்ததும் காவல்துறையினர் நீதிமன்றத்தை நாடுகின்றனர்.**

**நீதிமன்றம் காவல்துறையினரின் கோரிக்கையை நிராகரித்து தமிழர்களின் வழிப்பாட்டுக்கு அனுமதி வழங்கிய பின்னர், நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற வேண்டிய – அதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தி அமைதியாக தமிழர்கள் தமது வழிபாட்டை நிகழ்த்துவதை உறுதிப்படுத்த வேண்டிய – காவல்துறையினர் சிங்களவர்கள் குழப்பம் விளைவிப்பதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் வழங்கி பின்னர் அதனை அடிப்படையாக வைத்து அமைதிக் குலைவு ஏற்படுகின்றது என்று தெரிவித்து தமிழர்களின் அடிப்படை உரிமைகளை குருந்தூர் மலையில் நேற்று மறுத்திருக்கிறார்கள்.**

**உண்மையில் அங்கு அமைதிக்குலைவு ஒன்று ஏற்பட்டு முரண்பாடு தோற்றம் பெறும் என்று முன்கூட்டியே தெரிந்த நிலையில், நீதிமன்ற உத்தரவைச் செயற்படுத்தத்தக்க வகையில் இரு தரப்பினருக்கும் வெவ்வேறான நேரங்களை வழங்கி, அந்த நேரத்தில் மற்றைய–வர்களின் தலையீடு இடம்பெறாததை உறுதிப்படுத்தி இலங்கைக் காவல்துறையினரால் சிறப்பாகச் செயற்பட்டிருக்க முடியும்.**

**சிங்களவர்கள் முதலில் வழிபாடியற்ற விரும்பியிருந்தால் அதற்கு அனுமதித்து அவர்களின் வழிபாடு முடிந்ததும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, தமிழர்கள் தமது பொங்கலைச் செய்வதற்கு அனுமதித்திருக்க முடியும். ஆனால், அதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்காத காவல்துறையினர் இரு தரப்பினரையும் ஒரே நேரத்தில் உள்ளே அனுமதித்தது மட்டுமன்றி, தமிழர்கள் தமது வழிபாட்டை தொடங்குவதை சிங்களவர்கள் தடுப்பதற்கான ஏதுநிலைகள் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.**

**சிங்கள, பௌத்த மேலாதிக்கத்திலிருந்து விடுபட முடியாத காவல் துறையினர், பௌத்த துறவிகளின் விருப்பத்தை நிறைவேற்றி அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் காட்டிய கவனத்தை நீதி நியாயத்தை நிலைநாட்டுவதிலோ நீதிமன்ற உத்தரவைச் செயற்படுத்துவதிலோ காட்டவில்லை.**


**இதுவே இந்த நாட்டில் தமிழர்கள் தாம் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றோம் என்கிற உணர்வையும் விசனத்தையும் வெறுப்பையும் வரவைக்கின்றது. இதனால்தான் இலங்கைக் காவல்துறையினர் தொடர்புபடக்கூடிய எந்தவொரு உள்நாட்டு விசாரணையும் நீதி நியாயத்துடன் நடைபெறாது என்று தமிழர்கள் நிராகரிக்கின்றார்கள். அதற்குப் பதிலாக வெளிநாட்டு அல்லது பன்னாட்டு நீதி விசாரணைகளைக் கோரி நிற்கின்றார்கள். அதற்கு மறுப்புத் தெரிவித்து உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வோம் என்று பன்னாட்டுச் சமூகத்திற்கு வாக்குறுதியளிக்கும் ஆட்சியாளர்கள், இதுபோன்று தமது காவல்துறையினர் பக்கச்சார்பாகச் செயற்படுவதற்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் ஊக்குவிக்கும்போது தமிழர்கள் உள்நாட்டு விசாரணைகளின் மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியும்.**

**ஆளும்தரப்பினர்உருவாக்கிவரும்தேசியஐக்கியமற்றும்நல்லிணக்க ஆணைக்குழு, விசாரணைகளை நடத்தி வழக்குகளைத் தாக்கல் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று முன்னாள் ஐ.நா. அதிகாரியான யஸ்மின் சூக்கா அண்மையில் வலியுறுத்தியிருந்தார். இந்தக் காவல்துறையினரே அத்தகைய விசாரணைகளை நடத்துவார்கள் என்கிறபோது அவர்களிடமிருந்து எப்படி நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும்? அந்த விசாரணைகளிலும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பக்கம் நின்றே காவல்துறையினர் செயற்படுவார்கள் என்பதற்கு குருந்தூர்மலைச் சம்பவம் ஆகப் பிந்திய உதாரணம். நீதியின் பக்கம் நிற்பதற்குப் பதில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பக்கம் நிற்பதே இலங்கைக் காவல்துறையினரைப் பொறுத்தவரைக்கும் நீதி நியாயம். அதனால்தான் தமிழர்களால் அவர்களின் விசாரணைகள் மீது ஒருபோதும் நம்பிக்கைகொள்ள முடியவதில்லை.**

**இந்த நிலையை மாற்றுவதானால், குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற – தமிழர்களின் வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்த – தவறிய காவல்துறை அதிகாரிகள் மீது பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரிரான் அலஸ் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் ஏனையவர்களும் இது போன்ற நடந்துகொள்ள அஞ்சுவார்கள். ஆனால் அத்தகைய எந்த நடவடிக்கையும் இடம்பெறாது என்று உறுதியாக நம்பலாம். ஏனெனில் இது பௌத்த, சிங்கள பேரினவாதால் ஆளப்படும் நாடு. இங்கு ஏனையவர்களுக்கு நீதியோ நியாயமோ கிடைக்காது.**

# மனனத்தின் மாண்பு

பெ.முருகன்




மனப்பாடக் கல்விமுறையின் குறைபாடுகள் பற்றி இன்று விரிவாகப் பேசுகிறோம். கூகுள்தேடுதளஉதவியால் இன்று எந்தத் தகவலையும் உடனே பெறலாம். சரிபார்த்துக்கொள்ளவும் முடிகிறது. அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் உள்ளிட்ட நோக்கு நூல்களும் இணையத்தில் எளிதாகக் கிடைக்கின்றன. இந்நிலையில் மனப் பாடம் எதற்கு என்னும் வினா இயல்பாக எழுகிறது. மனனம் செய்வதே தேவையில்லை என்றும் நினைக்கிறோம்.

அதேசமயம், பாடசாலை அளவிலான பரீட்சைகளில் பாடத்தில் உள்ளதை அப்படியே மனனம் செய்து எழுதுபவருக்கே அதிக மதிப்பெண் கிடைக்கும் என்னும் நிலையும் உள்ளது. கருத்து ரீதியாக எதிர்ப்பும் நடைமுறையில் ஏற்பும் பெற்று மனனம் பற்றிய முரண் நிலவிவருகிறது. தமிழ் இலக்கியக் கல்வி கற்றலிலும் கற்பித்தலிலும் மனனம் பற்றி எனக்கெனச் சில கொள்கைகள் உண்டு.

### மனனமும் மரபுக் கல்வியும்

மரபான தமிழ்க் கல்விமுறையில் மனனத்திற்கு முதன்மையான இடம் இருந்தது. நூல் முழுவதையும் மட்டுமல்லாமல் உரையையும் மனனம் செய்து ஒப்பிப்போர் இருந்துள்ளனர். பலர், பல நூல்களைப் பார்க்காமலே பாடம் சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தார்.

உ.வே.சாமிநாதையரும் மனனத்தில் சிறந்தவர். சூடாமணி நிகண்டின் பன்னிரண்டு தொகுதியும் மணவாள நாராயண சதகமுதலிய சில சதகங்களும் இரத்தின சபாபதி மாலை முதலிய சில மாலைகளும் நன்னூல் மூலமும் மனனம் செய்து தந்தையாரிடம் ஒப்பித்து வந்தேன் (ம.மீ.ச., பாகம் 2, ப.4) என்று சொல்கிறார். நிகண்டு பன்னிரண்டு தொகுதியும் மனனம் என்பது எளிதல்ல. இப்படி இன்னும் எத்தனையோ நூல்களை மனனம் செய்து கற்றவர் அவர்.

ஓலைச்சுவடிக் காலத்துக் கற்றலில் மனனத்திற்கு முதன்மை இடமிருந்தது. சுவடிகள் கிடைப்பது அரிது; படியெடுப்பது சிரமம்; சுவடிகளைப் பாதுகாத்தல் கடினம். எனவே, மனனம் போற்றப்பட்டது. உ.வே.சாமிநாதையர் ஓலைச்சுவடி மூலம் இளமையில் கற்றவர் எனினும் அச்சு நூல்களைக் கையாளும் நிலையும் அவர் காலத்திலேயே ஏற்பட்டது. எனினும் மனனத்திற்கான இடம் அப்படியேதான் இருந்தது.

உயர்கல்வியில் தமிழ் இலக்கியம் இடம்பெற்ற பிறகு மனனம் அவ்வளவாக வலியுறுத்தப்படவில்லை எனினும் அதற்கு முக்கிய இடமிருந்தது என்பதில் ஐயமில்லை.

இப்போதைய தலைமுறையில் மிகச் சிலரைத்தான் அப்படிக் காண்கிறேன். சில குழந்தைகள் 1330 குறள்களையும் மனனமாகச் சொல்கின்றனர். தொலைக்காட்சிகளில் அது பேராற்றலாகக் கொண்டாடப்படுகின்றது.

நடிகர் சிவக்குமாரின் மனனத்திறன் அனைவரும் அறிந்தது. குறிஞ்சிப்பாட்டில் வரிசைப்படுத்தியுள்ள 99 மலர்களையும் அவர் அடி பிறழாமல் மேடைகளில் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அவர் மகன் நடிகர் சூர்யாவும் குறிஞ்சிப் பாட்டு அடிகளை அப்படியே சொல்லிக் கைத்தட்டல் வாங்குகிறார். ஆக, மனன ஆற்றலுக்கு இருக்கும் மவுசு இன்னும் குறையவில்லை.

பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் மனப்பாடப் பகுதி மட்டுமல்லாமல், செய்யுள் பகுதி முழுவதையும் மனனம் செய்துவிடும் வழக்கம் இருக்கிறது. அப்படிச் செய்யும்படி நிர்ப்பந்தம் இருப்பதால் செய்கிறோம். ஆனால், நீண்ட காலத்திற்கு அவற்றை எத்தனைபேர் நினைவில் வைத்திருக்கின்றனர். குறிப்பாக தேவாரங்கள் இன்னும் இளவயது முதல் மனனம் செய்விக்கப்படுகின்றன. அதனளவுக்கு மற்றையவற்றை மனனம் செய்வதில் அக்கறை செலுத்தப்படுவதில்லை.

உயர்கல்வியில் தமிழிலக்கியம் கற்பதற்கு இன்று மனனம் செய்வது நிர்ப்பந்தமாக இல்லை. அவரவர் விருப்பம் என்னும் நிலை. தேர்வில் பாடல்களையும் நூற்பாக்களையும் எழுதினால் கூடுதல் புள்ளிகள் கிடைக்க வாய்ப்புள்ளது என்று மட்டும் ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

### இரண்டு அனுபவங்கள்

முதலாவது, உ.வே.சாமிநாதையரின் 'என் சரித்திரம்' நூல் வாசிப்பனுபவம். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை முதன்முதலில் சந்திக்கும்போது ஒருபாடல் சொல்லும்படி அவர் கேட்டார். நைடதக் காப்புச் செய்யுளை உ.வே.சா. சொன்னார். 'தழைவிரி கடுக்கை மாலைத் தனிமுதற் சடையிற் சூடும்' என்று முதலடியைச் சொன்னதும் மகாவித்துவான் இடைமறித்தார். 'தனிமுதல் சடையிற் சூடும்' என்று திருத்தினார். 'தனிமுதற் சடையிற் சூடும்' என்பதற்கும் 'தனிமுதல் சடையில் சூடும்' என்பதற்கும் பொருள் வேறுபாடு உள்ளது. 'தனிமுதல்' என்பது 'சிவபெருமான்.' தனி – ஒப்பற்ற; முதல் – உலகத்திற்கு முதலானவன்; தனிமுதல்–சிவபெருமான். 'கடுக்கை மாலைத் தனிமுதல் சடையிற் சூடும்' என்றால் 'கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான்' என நிறுத்தம் பெற்று அவர் தம் 'சடையில் சூடும்' என்று பொருள் தொடர்ச்சி வரும். 'தனிமுதற் சடையில் சூடும்' என்றால் 'தனித்த முதற்சடையில் சூடும்' என்றாகும். அதாவது 'முதல்' என்பது 'சடை'யோடு நேரடியாக இணைந்துவிடும். மொழியில் ஓரெழுத்து எத்தனை முக்கியம் என்பதை எனக்கு உணர்த்திய சம்பவம் அது.

இரண்டாவது, எனக்கே நேர்ந்த அனுபவம். முதுகலைமாணி முடித்த நிலையில் பல்கலைக்கழக ஆய்வு உதவித்தொகை ஒன்றிற்கான நேர்காணலுக்குச் சென்றேன். நேர்காணல் செய்த பேராசிரியர் கம்பராமாயண வல்லுநர். கம்பராமாணத்திலிருந்து ஏதாவது ஒரு பாடல் சொல்லுங்கள் என்றார் அவர். குகப்படலத்திலிருந்து 'கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்' என்னும் பாடலைச் சொன்னேன். குகனின் தோற்றத்தைக் காட்ட வல்லின எழுத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்துக் கம்பர் எழுதிய பாடல். சொல்வதற்கும் கேட்பதற்கும் தெளிவுடைய பாடல். ஆகவே, அதைத் தேர்ந்தேன். அதன் மூன்றாமடி 'வெட்டிய மொழியினன் விழிக்கண் தீயினன்' என்பது. 'விழிகண் தீயினன்' என்று சொல்லிவிட்டேன். அப்படித்தான் மனனம் செய்திருந்தேன். 'விழிக்கண் தீயினன்' என்று அப்பேராசிரியர் திருத்தினார்.

'விழிகண்' வினைத்தொகையாகப் பொருள்படும். 'விழிக்கண் தீயினன்' என்பது 'விழியிடத்தே தீயைக் கொண்டவன்' என்றாகும். அதாவது 'கண்' உறுப்பைக் குறிப்பதல்ல; ஏழாம் வேற்றுமையைக் குறிக்கும் உருபு. பின்னர் பல பதிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது 'விழிக்கண்' என்றே இருப்பதைக் கண்டேன். 'விழிக்கும் தீயினன்' என்று சிலர் பாடம் கொண்டிருந்தனர். ஒற்றை விட்டுவிட்டு எப்படிப் பாடலைப் படித்தேன், அச்சுப்பிழை கொண்ட நூலிலிருந்து இப்பாடலை எடுத்தேனா, எழுதும்போது தவறு செய்தேனா என்றெல்லாம் எனக்குக் குழப்பம். அப்பாடலைச் சொன்ன விதத்தை அப்பேராசிரியர் பாராட்டினார் எனினும் எனக்கு மனம் ஆறவில்லை. அதுமுதல் ஒருபாடலை மனனம் செய்தால் எழுத்தெண்ணிப் படிக்கும் கவனத்தைக் கொண்டேன்.

செய்யுளை எந்திரத்தனமாக மனனம் செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. கவிதையான செய்யுள்களைத் தேர்வுசெய்வதற்கு முதலில் நுகரும் மனம் வேண்டும். அதன் பிறகு ஓசை, சொல்லாட்சி, நயம் ஆகியவற்றை உணர்ந்து வாசிக்க வேண்டும். ஓரளவு யாப்பிலக்கண அறிவு இருப்பின் எதுகை, மோனை ஆகியவற்றைப் புரிந்து மனனம் செய்வது எளிது; ஏதேனும் சொல்லோ அடியோ மறந்துபோனால் நினைவுக்குக்கொண்டுவருவதும் சுலபம். உரைநடைக்கும் செய்யுளுக்கும் உள்ள வேறுபாடு சொற்கட்டுத்தான். செய்யுளில் சொற்கட்டுக்கு எல்லையுண்டு; அதற்குப் பெயர் 'அடி.' உரைநடையில் 'வரி.' அடிக்கு வரையறை உண்டு; வரிக்கு இல்லை.

அடியில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனப் பொதிந்திருக்கும் இலக்கணக் கட்டுப்பாட்டை அறிந்துகொண்டால் மனனம் எளிதாகும். அவ்வறிவுடன் செய்யுளை வாசித்தால் இயல்பாகவே சந்தம் உருவாகும். பாடத் தெரிய வேண்டியதில்லை. சந்தக்கட்டு தெரிந்தால் போதும். அப் பாடலுக்குள் உறைந்திருக்கும் உணர்வை அழகாக வெளிக்கொண்டு வரலாம். அது மனதில் சட்டென்று பதியும். மனனம் செய்வதென்பது கண்ணை மூடிக்கொண்டு உருத்தட்டுவது அல்ல. அதுவொரு அறிவுச்செயல். கவிதையை நுகரும் இன்பமும் அறிவுச் செயலும் இணைந்தால் கிடைக்கும் இலக்கிய இன்பம் பெரிது.

கல்விப்புலத்தில் மாணவராகவோ ஆசிரியராகவோ இருப்போருக்குப் பழந்தமிழ் இலக்கியப் பாடல்களில் ஓரளவு மனனம் இருப்பது அவசியம். அது நுகர்திறனை மேம்படுத்தும்; இலக்கிய, இலக்கண அறிவை உயர்த் தும். கவிதையை, கவிச்சொற்களை ஒப்பிட்டுக் காண உதவும். இந்த ஒப்புமை காணுதல் உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள் ஆகியோரது பணிகளுக்கு மிகச் சிறப்பாகத் துணை செய்திருக்கிறது.

இலக்கியம் கற்பித்தலிலும் இது முக்கியமான கூறு. மனனம் செய்வதன் இன்னொரு சிறப்பு செய்யுளைச் சந்தம், பொருள் முடிபு ஆகியவற்றின் அடிப்படையில் வாசிக்கும் திறனை வளர்த்தல் ஆகும். பழந்தமிழ் இலக்கியப் பெருக்கம் கொண்ட நமக்கு இந்த வாசிப்புத் திறன் அவசியம். ஒரு செய்யுளை வாய்விட்டு வாசிக்கத் தடுமாறுவோர் பலரைக் கல்விப்புலத்தில் காணலாம். குறைந்தபட்சம் நூறு பாடல்களை அவர்கள் மனனம் செய்திருந்தாலே அத்தடுமாற்றம் நேராது.

மனனத்திற்கு நம் சமூகத்தில் இருக்கும் உலகியல் மதிப்பு இன்றும் பெரிது. இலக்கியம் கற்ற ஒருவர் நேர்முகத் தேர்வுக்குச் செல்லும்போது அவரிடம் முதலில் 'இந்த இலக்கியத்திலிருந்து ஒரு பாடலைச் சொல்லுங்கள்' என்று கேட்பது சாதாரணம். அல்லது ஒரு செய்யுளைக் கொடுத்து அதை வாசித்துப் பொருள் கூறச் சொல்லுதல் நடக்கும். அதனால்தான் மாணவர்களுக்கு மனனம் முக்கியம் என்பேன். இன்றைய கல்விமுறையிலும் மனனம் தேவை என்பது என் எண்ணம். எதை மனனம் செய்வது என்பதை அவரவர் விருப்பப்படி தேர்வுசெய்துகொள்ளலாம்.



இன்றைய தமிழ் இலக்கியக் கல்விப் பாடத்திட்டத்தில் மனனத்திற்கு இடமில்லை என்றாலும் நுகர்ச்சி, அறிவு, நடைமுறைப் பயன்பாடு ஆகியவற்றுக்காகச் சுயவிருப்ப அடிப்படையில் தேர்வுசெய்துகொண்ட பாடல்களை மனனம் செய்வது தேவை. அது தனிநபருக்கும் இலக்கியக்கல்விக்கும் ஒருசேர உதவும் என்று நம்புகிறேன்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பல நிறுவனங்கள் அரசியல் செல்வாக்கினால் மட்டுமல்லாமல் அதிகாரிகளின் வாக்கு வாதத்தினாலும் அழிக்கப்படுகின்றன

## பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு



தனது அமைச்சின் கீழுள்ளஒவ்வொருநிறுவனத் தலைவரும்தமதுநிறுவனத்தின் வருடாந்த வருமானம் தொடர்பில்திட்டத்தைத்தயாரிக்கவேண்டும்எனநகரஅபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திய பின்னரும்நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்க தான் தயங்கப் போவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பத்தரமுல்லை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அரசாங்க தொழிற்சாலை தொழிற்சங்கங்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட நகர அபிவிருத்தி மற்றும் வீட மைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் முன்வைக்கும் வகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொலன்னாவையில் அமைந்துள்ள அரசதொழிற்சாலைத் திணைக்களம் ஏறக்குறைய நூறு வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளின் சீருடையில் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ முத்திரைகள், ஏரிகளுக்கான வான் கதவுகள், வைத்தியசாலை உபகரணங்கள், கைவிலங்குகள், வாக்குப் பெட்டிகள் போன்றவை இத்திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்றன.

ஆனால், திணைக்களத்தில் பணியாற்றும் சில உயர் அதிகாரிகளின் மோசமான நிர்வாகத்தாலும், முறையற்ற நிர்வாகத்தாலும், திணைக்களம் தற்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்க ஒன்றியம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.

இதனால் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தைத் தொடர்ந்து பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், திணைக்களத்தைப் பாதுகாக்கும் வகையில் அதனை மறுசீரமைக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினர்.

அவ்வாறானதொரு தீர்மானத்தைத் திடீரென எடுப்பதற்குப் பதிலாக, திணைக்களத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி சில வேலைஒழுங்கமைப்புகளை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு குறிப்பிட்டார்.

அந்த நோக்கத்துக்காக, நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அவர்கள் தயாரிக்கும் பொருள்கள் பற்றிய விரிவான அறிக்கையை வழங்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறுவனங்களைக் கட்டி எழுப்ப முடியும். கடந்த காலத்தில், நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. இப்போது நாம் மெதுவாகத் தலையை உயர்த்துகிறோம். நாட்டுக்குத் தேவையான வளங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் உற்பத்தி செய்ய முடியும். மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வேலைகளை ஆரம்பித்துள்ளன. அந்த நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு இந்த நிறுவனத்தை எப்படியாவது மீட்க முயற்சிப்போம்.

அரசியல் செல்வாக்கால் மட்டும் பல நிறுவனங்கள் அழிக்கப்படவில்லை. அதிகாரிகளின் வாக்குவாதத்தாலும் அழிக்கப்படுகின்றன. லஞ்சம், ஊழல், வீண் விரயம் என்று நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரையும் ஒட்டு மொத்த நாட்டு மக்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த வீழ்ச்சியால் பாதிக்கப்படுவது அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அரச அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்களும் பொறுப்புக் கூற வேண்டும். ஒரு நிறுவனத்தில் சிறிய தொழிலாளி ஓர் ஆணியைக் கொண்டு சென்றாலும் அவருக்கு கடிதம் அடித்து விலக்குவார்கள். ஆனால், அதிகாரிகள் தவறு செய்தால், அதைப் பற்றி பேச ஆளில்லை. இந்த பல அரச நிறுவனங்களின் வீழ்ச்சிக்கு உயர் அதிகாரிகள் முதல் கீழ்மட்ட அதிகாரிகள் வரை பொறுப்புக் கூற வேண்டும்.

அதனால்தான் நிறுவனத் தலைவர்கள் தங்கள் நிறுவனத்திலிருந்து வருடாந்த வருமானம் ஈட்டுவதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். திட்டங்களை வகுத்து, செயற்படுத்தி, முன்னேற்றத்தைக் காட்டுங்கள். இல்லை என்றால் அந்த அதிகாரிகள் தொடர்பான முடிவுகளை எடுக்கவும் நான் தயங்க மாட்டேன்.

ஓர் அரசியல்வாதியாக நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நிறுவனத்தைக் காப்பாற்ற அனைத்து தொழிற்சங்கங்களும் அரசியலை மறந்து ஒரே கருத்துக்கு வந்து என்னுடன் கலந்துரையாடியதால் அந்த அணுகுமுறை மாற்றம் அவசியம். சில நேரங்களில் நாம் ஒரு படி பின் தள்ளப்படுவோம். நல்ல நோக்கத்துடன் செய்யப்படுவதால் அது தோல்வியல்ல. ஒரு நிறுவனத்தை உருவாக்க, அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களிடமிருந்து யோசனைகள் மற்றும் ஆலோசனைகளையும் பெற வேண்டும். ஏனென்றால் அவர்கள் வேலை மற்றும் அமைப்பு பற்றி அறிந்தவர்கள். ஒருவேளை நாம் நிர்வாக விதிமுறைகளை மாற்ற வேண்டிய தேவை ஏற்படலாம். அந்த முடிவுகளை நாங்கள் எடுப்போம். உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால் என்னுடன் பேசுங்கள். தகவல் தர பயப்பட வேண்டாம். - என்றார். (05)



## பெண்களை தாக்கிய விதம் வெறுக்கத்தக்க ஒரு செயல்!

### கீதா குமாரசிங்க கண்டனம்

பெண்களின் ஆடைகளைக் களைந்த வீடியோ பதிவு செய்தமைக்கு பெண் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேரரின் ஒழுங்குப் பிரச்சினைகளை தனித்தனியாகக் கையாளலாம். ஆனால், பெண்களை நிர்வாணமாக்கித் தாக்கிய விதம் வெறுக்கத்தக்கது. அதைச் செய்ய எந்த நபருக்கும் உரிமை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி குற்றவாளிகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (05)

## பெரமுன எம்.பிக்களின் குடும்பத்தினருக்கு உயர்பதவிகள், வாகனங்களுடன் ஊதியம்

### ஆளும் தரப்பின் திட்டத்தை நிராகரித்த மொட்டுக் கட்சியினர்

அமைச்சுபதவிகளை கோரும் பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கம் உயர் பதவிக் குழுவொன்றை உருவாக்க முன்வந்ததாகவும் எனினும் பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் அதனைநிராகரித்துவிட்டனர் எனவும் டெய்லி மிரர் தெரிவித்துள்ளது. உயர்பதவி குழுஎன்றஒன்றைஉருவாக்கி அதற்கு பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களை நியமிப்பதுடன் அவர்களுக்கு ஊதியம் வாகனங்கள் போன்றவற்றை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது. எனினும் பொதுஜனபெரமுன நாடாளுமன்றஉறுப்பினர்கள் தங்களுக்கு அமைச்சு பதவிகளே வேண்டும் என பிடிவாதமாக உள்ளனர்.

உத்தேசஉயர்பதவிகுழு குறித்த கூட்டமொன்றுக்காக அமைச்சுபதவிகளைகோரும் பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு அழைப்பு விடுத்தபோதிலும் அவர்கள் சமுகமளிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்ததிங்கட்கிழமையும் இந்த திங்கட்கிழமையும் எங்களுக்கு அழைப்பு விடுத்தனர் ஆனால் நாங்கள் செல்லவில்லை என பொதுஜனபெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள்ஊதியங்களுடன் அரசாங்கபதவிகளைவழங்க அரசாங்கம் முன்வந்தது. ஆனால் அவற்றையும் அவர்கள் மறுத்துவிட்டனர்.

அமைச்சரவையை விஸ்தரிக்கஜனாதிபதியாரில்லைஎனத்தெரியவருகின்றது. இதேவேளை முக்கிய வாக்களிப்பொன்றின் போது அரசாங்கத்தை ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் திட்டமிட்டனர் என விடய மறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)



## பாலர் பாடசாலை கட்டடம் கிழக்கு ஆளுநரால் திறப்பு

உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் எல்.டி.எஸ்.பி. நிகழ்ச்சி திட்டத்தினூடாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலையின் இரண்டாம் மாடி கட்டடத்தொகுதி கிழக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூரில் 9.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அல் - ஹிக்மா முன்பள்ளியின் பணிகளுக்கு நிந்தவூர் பிரதேசசபையின் தலைவர், உறுப்பினர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்த பாரிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் எடுத்த முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வின் போது பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பிரதேசசபை செயலாளர் ஆகியோரால் வரவேற்பு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (05)

## இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு இழப்பீடு

### மட்டக்களப்பில் கிழக்கு ஆளுநர் வழங்கினார்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 107 பண்ணையாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு கால்நடை திணைக்களத்தில் வைத்து கிழக்கு மாகாண ஆளுநரால் 3.4 மில்லியன் ரூபா இவ்வாறு இழப்பீட்டுத் தொகையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் மொன்டோஸ் என்றழைக்கப்பட்ட குளிருடன் கூடிய சூறாவழி ஏற்பட்டதில் திறந்த வெளியில் வளர்க்கப்பட்ட கால்நடைகள் கிழக்கு மாகாணத்தில் அதிகளவில் இறந்திருந்தன. இவ்வாறு பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு கால்நடை திணைக்களகாரியாலயத்தில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஏ.எம்.பாசி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இழப்பீடுகளை வழங்கி வைத்ததுடன், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டார். (05)

## ஹற்றன் பிரதேசத்தில் விசேட சோதனைகள்



ஹற்றன் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ்கள் ஹற்றன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளால் வியாழக்கிழமை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த சில நாள்களாகப் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற பஸ் விபத்துக்கள் காரணமாக இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறு இடம்பெற்ற பரிசோதனைகளில் சில பஸ்களில் ரயர்கள் பொருத்தமற்ற நிலையில் இருப்பதும், சில பஸ்களின் துணைக்கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதும் மற்றும் ஓட்டுநர் உரிமம் இன்றி பஸ்களை செலுத்துவதும் உறுதி செய்யப்பட்டதாக வாகனப் பிரிவின் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (05)

## குழந்தைகள் இடையே மீண்டும் பரவும் கொடிய நோய்; பெற்றோர்களே உஷார்

மத நம்பிக்கை காரணமாக குழந்தைகளுக்கு 'தட்டம்மை தடுப்பூசி' செலுத்துவதை சிலர் தவிர்த்து வருவதாகவும், இதனால் தட்டம்மை அம்மை நோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட 15 குழந்தைகளில் 7 பேருக்கு தட்டம்மை நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் குறித்த குழந்தைகள் அனைவருக்கும் தட்டம்மை தடுப்பூசி செலுத்தப்படவில்லைஎன்பதும் தெரியவந்துள்ளது.

இந்தவைரஸ்சுவாசக்குழாய் வழியாக உடலுக்குள் நுழைந்து சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அறிகுறிகள் தோன்றும். காய்ச்சல், சளி, மூக்கு ஒழுகுதல் மற்றும் கண் சிவத்தல் ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாகும்.

சில மத நம்பிக்கைகள் காரணமாக தடுப்பூசி போடுவதை சிலர் தவிர்ப்பதால் அம்மை நோய் பரவும் அபாயம் உள்ளது. - இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் தெற்காசியாவில் தட்டம்மை நோயை இல்லாதொழித்த 5 நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழர்களின் பிரச்சினைகளை காரணங்காட்டி ஜனாதிபதி சர்வதேச ஆதரவைப் பெறமுயற்சி

## சாணக்கியன் குற்றச்சாட்டு



ஒரு பக்கத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவேன் எனக் கூறி சர்வதேசத்தினுடைய ஆதரவை பெறவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை எடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இந்தவிடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில் –

'தமிழர்களின் பிரச்சினைகளுக்குதீர்வுவழங்குவேன்எனக்கூறிசர்வதேசத்தினுடையஆதரவைப்பெறவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை எடுத்து வரு கின்றார்.

அதே போன்று உள்நாட்டுக்கு உள்ளே பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருப்பதற்கு தங்களுக்கும் மொட்டு கட்சியினருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு விட்டதாகக் காட்டுவதற்கான முயற்சியினையும் மேற்கொண்டு இருக்கின்றனர்.

அதேபோல சரத் வீரசேகர, நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள்இனவாதத்தை மீண்டும்இந்தநாட்டுக்குள்ளே கொண்டுவந்துதங்களுடைய அரசியல் இலாபத்தைத் தேடுபவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

இவர்களை அனைவரையும்வைத்துக்கொண்டு இயக்கிதமிழ்மக்களின்தீர்வு தேவை இல்லை என்று சொல்ல முயற்சி எடுக்கும் ரணில்விக்கிரமசிங்கவிடமும் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

மொட்டுக்கட்சி தன்னுடையகட்சியினுடைய மாவட்ட கிளைகள் பிரதேச கிளைகள் தொகுதிகள் போன்ற விடயங்களிலே புனரமைப்புகள் செய்து கூட்டங்களை நடத்திக் கொண்டு வருகின்றார்கள்.

இந்தக் கூட்டங்கள் அனைத்தையும் பார்த்தால் நேரடியாக அரசாங்கத்தைத் தாக்கும் கருத்துக்களை தான் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இதிலேவேடிக்கையான விடயம் என்னவென்றால் அரசாங்கத்தின் பங்குதாரர்களாகஇருந்துகொண்டு நாடாளுமன்றத்திலே அரசாங்கத்துக்கு புதிய சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு தேவை வரும்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்அதனை ஆதாரித்திருக்கின்றார்கள்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இந்தியாவிலிருந்து நேரடியாக எண்ணெய்குழாய் பற்றி ஆய்வு

இந்தியாவில் இருந்து இலங்கைக்குஎண்ணெய்க்குழாய் அமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கலந்துரையாடல் புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதுடன்,இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்பாக்லேஉள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேற்படி விவாதம் நாட்டில் பெற்றோலியப் பொருள்களின் விநியோகத்தை விரைவுபடுத்துவதும், மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பதும்இதன்முதன்மை நோக்கமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மொரவேவ பிரதேசத்தில் இனங்களுக்கிடையில் முறுகலைத் தோற்றுவிக்க தீய சக்திகள் முயற்சி

மொறவெளபிரதேசத்தில் இனங்களுக்கிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் முகமாக தீய சக்திகள்செயற்பட்டு வருகின்றன எனஅப்பகுதிமக்கள்கவலை வெளியிட்டுவருகின்றார்கள்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கைவிடுக்கின்றார்கள்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது –

மொரவெள பிரதேச செயலகபிரிவின்கித்துலூத்து கிராமசேவகர்பிரிவுக்குட்பட்ட நான்காம் கண்டம் பகுதியில் கடந்த போயா தினத்தன்று அப்பகுதியில் உள்ள மரம் ஒன்றின் கீழ் இனம்தெரியாத நபர்களால் பிள்ளையார் சிலை ஒன்று வைக்கப்பட்டதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த மக்களிடம்இலங்கைபுலனாய்வு துறையினரால்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஒரு வாரத்தின் பின்னர் அப்பகுதியில் ஓர் அடிஉயரமான புத்தர்சிலை ஒன்றும் வைக்கப்பட்டது.

இதனால் அப்பகுதி மக்களிடையே இன முரன்பாடுகள் ஏற்பட்டதையடுத்து தற்போது அவ்விரு சிலைகளும் இனம்தெரியாத நபர்களால் அகற்றப்பட்டுள்ளன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இரு இனத்தவர்களும் சுமுகமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்துவருகின்றநிலையில் இப்பகுதியில் மீண்டும் புத்தர்சிலையைவைத்துஇன நல்லிணக்கத்தைசீர்குலைக்க முயற்சிகள்நடக்கின்றனஎன அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர். இதுதொடர்பாகசம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதிமக்கள்கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# திக்கோடையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகம் திறந்துவைப்பு









ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்வழிகாட்டலின்கீழ்,மாகாணவிசேடசெயற்பாடுகளுக்காககுறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையில் ரூபா 13 மில்லியன் செலவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மேற்பார்வையோடு மட்டக்களப்பு – திக்கோடை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் திறந்து வைத்து பொதுமக்கள் பாவனைக்கும் கையளித்து வைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை திறந்து வைத்து பொதுமக்கள்பாவனைக்கும்கையளித்து வைத்தார். இந்த விழாவுக்கு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மாகாணசுகாதாரஅமைச்சின்செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கணகமுத்து கிரிஷ்னபிள்ளை, வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, புதுக்குடியிருப்புதள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி ஜே.பாஸ்கரன், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.ஏ.நபீல், மாகாண சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (05)

# ஒடுக்கமான பாலத்தால் அச்சத்தில் மக்கள் அவதி

சாய்ந்தமருது பழைய வைத்தியசாலைவீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் அந்தபாலத்தில்பயணிப்போர் அச்சத்துடனே பயணித்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை, உப தபாலகம், பாடசாலை, பள்ளிவாசல்கள் மற்றும் தொழில் நிமித்தமான பயணங்களை மேற்கொள்வோர் இந்த பாலத்தின் வழியே பயணிக்கின்றனர். எனவே, அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியாக விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டும்என்பது சாய்ந்தமருதுமக்களின்விருப்பமாகும்.

இருப்பினும்இந்தபிரதேச மக்களால்தெரிவுசெய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இந்தப்பிரச்சினைக்குதீர்வை தருவதாகதேர்தல்காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை என விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில்அதிகாரிகள்பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் தமக்கான உச்சகட்ட அதிகாரத்தை பயன்படுத்தி இந்த பிரச்சினைக்குதீர்வைவழங்க முன்வர வேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தப் பாலம் 5 கோடி ரூபா செலவில் புணரமைப்பு செய்யப்படுவதாகதெரிவிக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (05)

# ரம்பொட்டுக் குளத்தில் நீராடிய மாணவன் நீரில் மூழ்கிப் பலி!

கல்கமுவ, ரம்பொட்டுக் குளத்தில் மூழ்கி பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமை மாலை குறித்த மாணவன் குளத்தில் நீராடிக்கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 15 வயதுடைய ரம்பொட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவராவார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# செட்டிக்குளத்திற்கு இரவு நேரத்தில் உயிரை பணயம் வைக்கும் பயணம்

வவுனியாவில் இருந்து செட்டிகுளம் வரை தினமும் இயக்கப்படும் கடைசி இரவு பஸ்ஸில் போதிய இடவசதி இல்லாததால் அந்த பஸ்ஸில் உயிரை பணயம் வத்து பயணிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பஸ்ஸிற்கு மேலதிகமாக பஸ் ஒன்றை வழங்குமாறும் அல்லது வவுனியா மற்றும் செட்டிகுளத்துக்கு இடையில் இரண்டு பஸ்களை இயக்குமாறு இலங்கை போக்குவரத்து சபைஅதிகாரிகளிடம்பயணிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா அலுவலகங்களில் வேலை செய்பவர்களும், கடைகளில் வேலை செய்பவர்களும்தினமும்வேலை முடிந்து இந்த பஸ்ஸிலேயே பயணிக்கின்றனர். பஸ்ஸில்இடம் போதாதமையால், பஸ்ஸின் மேற்கூரையிலும், சரக்குகளை வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட சிறிய பகுதியிலும் ஏராளமான பயணிகள் சவாரி செய்கின்றனர்.

இந்த பயணம் மிகவும் ஆபத்தான பயணமாக இருந்தாலும்,இலங்கைபோக்குவரத்து சபை அதிகாரிகள் தகுந்த மாற்று நடவடிக்கையை இது வரை பின்பற்றவில்லை என்பது கவலைக் குரிய விடயமாகும். (05)


## பொலிஸாரின் அபராத புத்தகத்தில் மாயமான 50 பக்கங்கள்

ஊருபொக்க பொலிஸ் போக்குவரத்துபிரிவின்பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் பொறுப்பிலிருந்த போக்குவரத்து குற்றம் தொடர்பான அபராத விதிப்பு புத்தகத்தின் 50 பக்கங்கள் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பக்கங்கள் 1 முதல் 50 வரை காணவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் போக்குவரத்து பிரிவு வழங்கிய அறிவித்தலின் பிரகாரம், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிவிசாரணைகளை ஆரம்பித்துள்ளார் எனப்பொலிஸார்தெரிவித்தனர்.இதுதொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்பட வில்லை. (05)

## பூசகர் கைது

சக பூசகர்கள் ஐவரின் பெறுமதியான கையடக்க தொலைபேசிகளை திருடினார் எனும் குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற உற்சவத்தில் பூசகர்கள் ஐவரின் தொலைபேசிகள் களவாடப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில், பூசகர்கள் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், ஆலயத்தில் அன்றைய தினம் நின்ற 25 வயதான பூசகர் ஒருவரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)



## மாவடிப்பள்ளி அஸ்ரப் வித்திக்கு புதிய அதிபர்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்விவலய மாவடிப்பள்ளி கமு/அல்-அஸ்ரப் மகா வித்தியாலய அதிபராக முன்னாள் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியான அதிபர் தரம் ஒன்றை சேர்ந்த வீ.எம். ஸம்ஸம் பொறுப்பேற்றார் அப்பாடசாலையின்தற்காலிய அதிபராக பதவிவகித்த ஏ.எல்.ரஜாப்தீன் புதிய அதிபரிடம் பாடசாலையின் பொறுப்புக்களை கையளித்தார்.

காரைதீவுகோட்டக்கல்வி அதிகாரி ஜே. டேவிட் முன்னிலையில் தமது பொறுப்புக்களைகையேற்ற புதிய அதிபர் தாம் இந்த பாடசாலையை மேலும் கல்வி ரீதியாகவும், ஏனைய இணைப்பாடவிதான ரீதியாகவும் முன்னேற்ற முழுமையாக பணியாற்ற தயாராக உள்ளதாக தெரிவித்தார். தான் பொறுப்பேற்று குறுகிய காலத்தில் பாடசாலையை சிறப்பாக வழிநடத்திய ஏ.எல்.ரஜாப்தீனின் நிர்வாக ஆளுமையை பிரதிக்கல்வி பணிப்பாளர்ஜிஹானாஆலிப் பாராட்டி அவரது சேவை மிகவிரைவில்இன்னுமொரு பாடசாலைக்கு நிரந்தரமாக கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துரைத்தார்.

இந்நிகழ்வில்கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்விபணிப்பாளர்களான எம்.எச்.றியாஸா,பீ.ஜிஹானா ஆலிப், உதவிக்கல்வி பணிப்பாளர்ஏ.அஸ்மாமலிக், காரைதீவுகோட்டக்கல்விஅதிகாரிஜே. டேவிட், கமு/கமு/ அல்-ஹுசைன்வித்தியாலய அதிபர் ஏ.எல்.எம்.ஏ. நஸீர், கிழக்கு மாகாண ஐசிரி பேரவை பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதா உமர், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபராக அப்பாடசாலையின்தற்காலிய அதிபராககடமையாற்றிவந்த எம்.எஸ்.எம். ஆரிப் நிரந்தர அதிபராக உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம்.ஏ. மலிக் முன்னிலையில் பொறுப்பேற்று கொண்டார். இந்நிகழ்வில் அப்பாடசாலையின்ஸ்தாபகஅதிபர்ஏ.எல்.எம். நாவித், கிழக்கு மாகாண ஐசிரி பேரவை பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதா உமர், பாடசாலை ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து | வண்ணத்தெரிவுகள்:


## இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

conditions apply*




# ஊடகர் 'தராக்கி'யின் நினைவாக மட்டக்களப்பில் நூல் வெளியீடு

(அகீல்)

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் இலங்கை, சிவராம் ஞாபகார்த்த மன்றம் சுவிஸ்தமிழர்அமைப்புஆகியனஇணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூலின் வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத் தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41பேர் எழுதிய கட்டுரைகள் உள்ளடங்குகின்றன.

கிழக்குஊடகவியலாளர்ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்துகிறார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா, ஜெயானந்தமூர்த்தி, பாக்கியசெல்வம், அரியநேத்திரன் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், காத்தான்குடி நகர சபை நூலகர் திருமதி க.ருத்ரகுமார், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆர். பாரதி, 'ஆகவே' ஜபார், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொர்டிகமகே ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

# 10 கிலோ கஞ்சாவுடன் கடற்படை சிப்பாய் கைது

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா, புதிய பேரூந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 10 கிலோ 74 கிராம் கேரளா கஞ்சாவுடன் கடற்படை சிப்பாய் ஒருவரைத் தாம் கைது செய்தனர் என்று வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் கேரளா கஞ்சா கடத்துவதாக வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தவலின் அடிப்படையில் நேற்றுக் குறித்த பேரூந்தினை வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் வைத்துப் பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது ஐந்தாக பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்ட 10 கிலோ 74 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டதுடன், அதனைதம்வசம்வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த பேரூந்தில் பயணித்த கடற்படை சிப்பாயை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் குறித்த சிப்பாயிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் முழங்காவிலில் உள்ள முகாமில் பணியாற்றிவரும் 27வயதுடைய நபர் எனவும் தெரிய வந்துள்ளது.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றப்பட்ட கேரளா கஞ்சாவினையும், சந்தேக நபரையும் வவுனியா பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (100)

# வவுனியாவில் நேற்று கைக்குண்டு மீட்பு



தோணிக்கல் பகுதியில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டம், தோணிக்கல், லக்சபான வீதியில் காணியைத் துப்பரவு செய்தபோது கைக்குண்டு காணப்பட்டதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின்அடிப்படையில்பொலிஸார்குறித்த காணிக்கு சென்று குறித்த கைக்குண்டை மீட்டெடுத்துள்ளனர்.

குறித்தகைக்குண்டுஇன்னும்இயங்கு நிலையில் காணப்படுகின்றதா? அல்லது செயழிழந்த நிலையில் காணப்படுகின்றதா என்பதை ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கு பொலிஸாரினால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அவர்கள்கைக்குண்டை பாதுகாப்பான முறையில் அங்கிருந்து அகற்றியுள்ளனர். (100)

# உலகில் பட்டினியால் அவதியுறும் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஐ.நா. அறிக்கை

உலகளாவிய ரீதியில் 735மில்லியன்மக்கள்பட்டினியால்அவதியுறுகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த எண்ணிக்கை கொவிட் தொற்று பரவலுக்கு முன்னர் பட்டினியால் அவதியுற்றவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை 2030ஆம் ஆண்டுக்குள் பட்டினி இல்லாத உலகை உருவாக்கும் இலக்கை அடைவதற்கு இது கடுமையான அச்சுறுத்தலாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# விருதுகளை அள்ளிக் குவிக்கும் சம்மாந்துறை வைத்தியசாலை

சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற வைத்தியசாலைகளுக்கிடையிலான பொலித்தீன் பாவனையை இல்லாமல் செய்து, சுற்றுச்சூழலை அழகுற வைத்திருந்தமை,மற்றும்சுற்றுச்சூழல் பசுமை நடவடிக்கைகளை பராமரித்து வீண்விரயமாதலை குறைத்தமை போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக 'ஜனாதிபதி சுற்றாடல் விருது' பெற்ற சம்மாந்துறைஆதாரவைத்தியசாலையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனைபிராந்தியசுகாதார சேவைகள்பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில்நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது விபத்துக்கள் மற்றும் காயங்களை சிறப்பாக பராமரித்தமைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அமைச்சால் வழங்கி வைக்கப்பட்ட சான்றிதழ்களும் பணிப்பாளரால் வழங்கி வைக்கப்பட்டன.

திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர்எம்.சீ.எம்மாஹிர் மற்றும்தொற்றா நோய்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ் இர்சாதால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் சம்மாந்துறைஆதாரவைத்தியசாலையின்வைத்தியஅத்தியட்சகர் ஆசாத் ஹனிபா மற்றும் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர். அஹமட் நியாஸ் மற்றும் பணிமனை சார்பில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித் மற்றும் பிரிவு தலைவர்கள் ஏனைய உத்தியோகத்தர்களும்கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி ஏ.ஆர். அகமட் நியாஸ் இவ்விருதினை பெற்றமைக்கான வைத்தியசாலையின் அனுபவங்கள் மற்றும் செயற்பாடுகளை விளக்கக் காட்சியுடன் தெளிவுபடுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# குருந்தூர் மலையில் நேற்றுப் பதற்றம்

## பொங்கலை தடுத்து நிறுத்திய சிங்கள பௌத்தர்கள்















காலைக்கதிர்
Kalaikkathir

# குருந்தூர் மலையில் நேற்றுப் பதற்றம்

## பொங்கலை தடுத்து நிறுத்திய சிங்கள பௌத்தர்கள்
























இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2023இல் வெளியிடப்பெற்றது.